தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-12 — தி.பி. 2015 கும்பம்-21 (4-3-84) 65 காசு இதழ் எண்: 34 | பகுதி- 11

இந்தியத் தேசிய இனங்களின் விடுதலைக் கோரிக்கை தீவிரமடைகிறது!

பின்தங்கிடும் தமிழினமும் விடுதலை உணர்வு பெற வேண்டும்!

அதிகாரக் கொடுமை, பொருளியல் தேக்கம், இந்திமொழி வல்லாண்மை – இவை நீங்க வேண்டுமானால் தமிழ்நாடும் விடுதலை பெற்றாக வேண்டும்!

தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு! தேசிய இனங்களின் விடுதலை மாநாடு!

மே மாதம் 5,6-நாள்களில் (தெ.ஆ.) பெண்ணாகடத்தில் எழுச்சி பெறும் இரு மாநாடுகள் நடைபெறும்!

தமிழ்நாட்டின் உரிமைக்குரல் தில்லியை எட்டியாக வேண்டும்

உ.த.மு.க. பங்கு கொள்கிறது.

அனைத்து அணியினரும் தவறாமல் பங்குகொள்க!

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருமுதுகுன்றம்-திருச்சி சாலையில் உள்ள பெண்ணாகடம் என்னும் ஊர், சமயச் சார்பிலும், அரசியல் சார்பிலும் வரலாறு படைத்த ஊர். பாடல் பெற்ற திருத்தலமாகிய அதில் தான் உழவர்களும் தொழிலாளர்களும் கடந்த காலத்தில் கிளர்ந்தெழுந்து புரட்சிக்கொடி ஏந்தி, முதலாளியக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் போரிட்டனர்.

அந்தப் புரட்சிப் போராட்டத்தின் முதல் புரட்சியாளராய், முழுமைப் போராளியாய் விளங்கிய தீவிரப் பொதுவுடைமையாளர் புலவர் கலிய பெருமாள் அவர்களும், அவர் குடும்பமும் அந்த மண்ணில் தான் வீரவரலாறு படைத்தனர். பொதுவுடைமைப் போர் புரிந்த கலியபெருமாளின் குடும்பத்தையே கொலைக் குற்றம் சாட்டிப் பதினைந்தாண்டுகள் சிறை வைத்தது அந்த நாளின் மக்கள் உரிமையை மதிக்காத மாநில அரசு! ஆம்! அந்த அரசு ஒரு திராவிட அரசே! இன்னும் சொன்னால் தமிழன் அரசே! ஆனாலும் அதிகார வெறியாலும் ஆளுமை அங்காப்பினாலும் அந்த அரசு அவ்வாறு செய்தது! கலியபெருமாளும், அவர் துணைவியார் திருவாட்டி வாலாம்பாள் அம்மையார், அவர் மக்களாகிய வள்ளுவன், நம்பியார் என்னும் இரண்டு குலக்கொழுந்துகளும், கலியபெருமாளின் தம்பி, வாலாம்பாளின் தமக்கையார், ஆகிய அனைவரும் முதலாளியக் கொடுமைகளுக்குப் போர்க்கொடி ஏந்திப் போரிட்டனர். பொதுவுடைமைப் போரில் அவர்கள் பதினைந்தாண்டுச் சிறைச்சென்ற பெருமை அவர்களைச் சேரக்கூடாது என்று நினைத்த தன்னதிகாரத் தந்நலத் தான்தின்னிக் கொடுமையர்கள் அவர்களைக் கொலைக்குற்றவாளிகள் எனச் சிறையில் அடைத்தனர். வரலாறு எப்பொழுதும் கண்மூடிக் கிடப்பதில்லை; அஃது எப்பொழுதும் தூங்குவதே இல்லை. அறிதுயில் கிடக்கின்ற அது, பாசறை வீரன் போல அடிக்கடி விழித்துக் கொள்ளும்! வெகுண்டு சீறும்! வரலாற்றை யாரும் தூங்கவைத்து விட முடியாது! ஏனென்றால் உண்மைதான் வரலாறாக மாறுகிறது.

அத்தகைய வீரவரலாறு படைத்த மண்ணில் தான் வரும் மே மாதம் 5,6 ஆம் நாள்களில் தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடும், இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாடும் நடைபெற இருக்கின்றன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநாட்டைத் தமிழகத்தின் முற்போக்கு அணி நடத்துகிறது. அதில் தீவிரப் பொதுவுடைமை (மார்க்சிய இலெனினிய) வீரர் கலியபெருமாள் அவர்களும், பெரியார் சம உரிமைக் கழகப் பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து அவர்களும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும், மக்கள் உரிமைக் கழகத் தலைவர்களும், இன்னும் பிற முதன்மையரும் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இரண்டு நாள் மாநாட்டிலும் தலைவர்கள் நாட்டின் எதிர்காலம் பற்றியும், தமிழின விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை முயற்சிகள் பற்றியும் தீவிரமாகக் கலந்து ஆய்வு நிகழ்த்தி, இரண்டாம் நாள் மாநாட்டு இறுதியில் முடிவான எதிர்காலத் திட்டங்களை வெளியிட உள்ளனர்.

தமிழ்த்தேசிய இன விடுதலை வேட்கை கொண்ட அனைத்து அணிகளின் அறிஞர்கள், இளைஞர்கள,

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

நம் பார்வைக்கு வருகின்ற இதழ்கள்!

1)	செந்தமிழ்ச்செல்வி 1-5 உருபா	இரா முத்துக்குமாரசாமி, கழு; நா.இ. பிரகாசம் சாலை சென்னை-108
2)	தமிழ்ப் பொழில் 2 உருபா	ச.இராமநாதன் கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி தஞ்சை-2
3)	சர்வோதயம் உரு: 2	வெ.இராமச்சந்திரன் தமிழ்நாடு சர்வோதைய சங்கம் 16 -நவாப் அக்கிம் சாலை, கோவை-1
4)	குறளியம் உரு 1	வேலா 3 மண்டபத்தெரு ஈரோடு-1
5)	கவிதை 1-50	தெசிணி மைலாப்பூர் சென்னை-4
6)	தேன்மழை 75 காசு	மனுவேல் அல்போன்சு 125 இசுடெர்லிங்சாலை, சென்னை-34
7)	தமிழ்ச்சுடர் தனிச்சுற்றுக்கு	மணிமுத்து 27 பி இலக்குமிபுரம், பழனி-2
8)	மனஓசை உரு 1	இரா.பழனிச்சாமி 159 வன்னியர் தெரு, சென்னை-94
9)	சித்தர் செயல் உரு 1-50	ஏ.சி.கணபதி 67 அருணாசலம் தெரு, சென்னை-2
10)	நீதி ஊற்று 80 காசு	பி.எசு. இராசு திக்குறிச்சி (அஞ்) பாகோடு, குமரிமாவட்டம்
11)	மக்கள் பாதை உரு ஒன்று	அ.மறைமலையான் 12 12 தாசுதின் கான்பகதூர்தெரு, சென்னை-5
12)	முல்லைச்சரம் குறிக்கப்பெறவில்லை	பொன்னடியன் வடபழனி, சென்னை-26
-)	நனைன நாடு 75 காசு	கே வேங்கடாசலம் விளையாம்பட்டு செங்கம், 606 701
14)	சுத்த சன்மார்க்கம் உருபா ஒன்று	நா.பால்வண்ணனார் 22, இராசகோபல் தெரு, சென்னை-2
15)	தமிழின ஓசை உருபா 1-50	தொ.து அன்புச்செழியன் Antop Hill, Sion Koliawada, Bombay-37
16)	ஈழச் செய்தி விலை குறிக்கப் பெறவில்லை	EPIC Post Bag 5551, Madras 94.
17)	மக்கள் மறுவாழ்வு விலை குறிக்கப் பெறவில்லை	டி.எசு.இராசு 3 கங்கையம்மன் கோயில்தெரு, சென்னை-94
18)	ஆசிரியர் பேரணி விலை குறிக்கப் பெறவில்லை	செ.முத்துசாமி 147 குளக்கரை சந்து, நாமக்கல்-2
19)	முன்னணி நன்கொடை 30 காசு	தமிழக மக்கள் முன்னணி 40-87 ஏடன் தோட்டம். சென்னை-12
20)	புது விழிகள் 0 50 காசு	இராம. உமாசந்திரன் 3 கர்ணக் கொல்லை, கீழைத்தெரு, கும்பகோணம்-1

(தொடரும்)

தமிழ்நிலம் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1955)
19 ஈ ஆ (வகுப்பு 8-ஆம் கட்டளைப்படி.)

1. வெளியிடும் இடம் : சென்னை
2. கால முறை : கிழமை ஒருமுறை
3. அச்சிடுவோர் பெயர் : திருவரட்டி. மா. தாமரை
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம், சென்னை-5
4. வெளிடுவோர்பெயர் : திரு. பெருஞ்சித்திரனார்.
   இனம் : தமிழர்
   முகவரி : தென்மொழி அச்சகம். சென்னை-5
5. ஆசிரியர் பெயர்.
   முகவரி : திரு. பெருஞ்சித்திரனார், சென்னை-5

ஒரு விழுக்காட்டிற்குமேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் — திரு: பெருஞ்சித்திரனார், சென்னை-5

பெருஞ்சித்திரனாரகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—2—1984
சென்னை-5

பெருஞ்சித்திரன்.
(ஒப்பம்)

தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு! இந்தியாவில் தேசியஇனங்களின் விடுதலைமாநாடு!

அன்பார்ந்த பொதுமக்களே,

இலங்கை வாழ் தமிழர்கள் அரசியல் உரிமைகள், மொழி உரிமை, கல்வி வேலைவாய்ப்பு உரிமைகள் அனைத்தும் இழந்து சிங்கள இனவெறி அரசால் உயிர்வாழ்வதற்குக்கூட உரிமையில்லாமல் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய இனவெறி அடக்குமுறை கொடுமையிலிருந்து விடுபட 'தனி ஈழ நாடு' பெறுவதே ஒரேவழி என ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் கருவிகள் ஏந்திப் போரிட்டு வருகின்றனர். இந்நிலையில் இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள ஆளும் கும்பல்கள் இலங்கைத் தமிழர்கள் சிங்கள இனவெறிக் கொடுமையிலிருந்து நிலையான விடுதலைபெறுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் சில்லறைச் சலுகைகளைக் கொடுத்து ஈழத் தமிழர்களின் விடுதலை உணர்வை, போராட்ட உணர்வை மழுங்கடிக்க முயல்கின்றன. இலங்கைத் தமிழர்களின் நிலையான விடுதலைக்கு ஒரேவழி 'தனிநாடு' பெறுவதே. இணக்கப் பேச்சு அன்று என்பதைத் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கும் நோக்கத்துடன் 'தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடும்'.

இலங்கையில் மட்டுமன்று, இந்தியாவிலும் நாகா, மிசோ, மணிப்புரி, அசாமி, பஞ்சாபி, தமிழர் போன்ற பல்வேறு தேசிய இனங்கள் இந்திய ஆளும் பிரிவினரால் சுரண்டப் பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகின்றன: நடுவண் அரசு இந்தி மொழியை இந்தி பேசாத பல்வேறு தேசிய இனங்கள் மீது திணிக்க எல்லா வழிகளையும் மேற்கொள்கிறது. ஒடுக்கப்படுகிற தேசிய இனங்கள் பலவேறு மாநிலங்களில் இன்று உரிமைக்காகப் போராடி வருகின்றன இவர்களின் குமுக, பொருளியல், அரசியல் விடுதலை பெறுவதை இந்திய மக்களுக்கு விளக்கும் நோக்குடன் 'இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாடும்' வருகின்ற மே 5,6-ஆம் நாள்களில் பெண்ணாடத்தில் நடத்த உள்ளோம். இம் மாநாடுகள் சிறப்புற அமைய பொருளதவி அளித்து ஆதரிக்க வேண்டுகிறோம்

இன்னணம்,

மாநாடு அமைப்புக் குழு
முற்போக்கு இளைஞர் அணி,
திருச்சி தென்னூர்க்காடு.

பெருமையைப் பாடும!

கொடுமுடிப் பாவலர் க.அ.ஒளியவன்

உலகத் தமிழ்இன முன்னேற்றக் கழகம்
உற்றிடும் இனியொரு புதியநல் உலகம்!—அது
கலகத்தில் கிடக்குமிவ் வுலகத்தை மாற்றும்
கவினமை வாழ்வு முறைகளைச் சாற்றும்!
நலனே யாண்டும் நிறைவுறச் செய்யும்!
நான்என தென்னும் செறுக்கினைக் கொய்யும்!
இலங்கும் பைந்தமிழ் மொழிஅர சாளும்!
இறைமைசால் ஒருமைப் பண்புகள் சூழும்!

தூய்மைக் கலைவளம் புலமைமேம் பாடு
துறைதொறும் உழைப்பு விளங்க மாண்போடு
வாய்மையே மூச்சாய் வளரும்பண் பாடு!
வையத்தில் நம்மவர்க் கில்லைஓர் ஈடு!
நோய்மையில் கிடக்கும் பலவேறு பாடு
நுழையாமல் தழைத்திடும் ஒருமைச்சீர் பாடும்
சேய்மையில் உள்ள பிறபிற நாடு
செந்தமிழ்த் தென்னகப் பெருமையைப் பாடும்!

இப்பொழுது நடைபெறும் வட்டமிசை மாநாட்டில் பங்குபெற்றோர் பற்றிய விளத்தங்கள்!

இலங்கை வட்ட மிசை மாநாட்டில் கலந்து கொண்டு தமிழர் சிக்கலுக்குத் தீர்வுகாண முயற்சி செய்யும் தலைவர்கள் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணி	— அமிர்தலிங்கம் தலைமையில் சிவசிதம்பரம், சம்பந்தன்,
தமிழரசுக் கட்சி	— சூசைதாசன்
தமிழ்ப் பேராயம் (காங்கிரசு)	— குமார் பொன்னம்பலம்
இலங்கைத் தொழிலாளர் பேராயம்	— தொண்டமான்
குடியரசுத்தொழிலாளர் பேராயம் சனநாயகத்தொழிலாளர் காங்கிரசு	— அப்துல் அசீசு
ஒன்றிய(ஐக்கிய)தேசியக்கட்சி	— பிரேமதாசா
சிறீலங்கா உரிமை(சுதந்திர)க் கட்சி	— விக்கிரம நாயக்கா
இலங்கா சமசமாசக் கட்சி	— கொல்வின் ஆர். டி.சில்வா
பொதுவுடைமைக் (கம்யூனிசுட்) கட்சி	— பீற்றர் கெனமன்

இத் தலைவர்களே இலங்கைத் தமிழர் சிக்கலைப் பேசித் தீர்க்க இருக்கும் தலைவர்கள் ஆவர், இவர்களைத் தவிர எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டார நாயக்காவும், மாநாட்டுப் பேச்சாளராக லலித் அத்துலத் முதலியும் இத தலைமை தாங்கி நடத்துபவராகக் குடியரசுத்தலைவர் ச.ஆர்.சயவர்த்தனவும் இதில் கலந்து கொண்டுள்ளனராம்

— நன்றி 'ஈழச்செய்தி' 18-1-84

என்ன சொல்கிறார் செயவர்த்தன

பிப்ரவரி மாதம் 23-ஆம் பக்கலுடன் முடிவடைந்த தமிழர் தலைவர்கள் செயவர்த்தனே தீர்வுப் பேச்சின் 4 ஆவது கூட்டத்தொடர் முடிவில், இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனே கீழ்வருமாறு தெரிவித்துள்ள கருத்துகள் உன்னிப்பாய்க் கவனிக்கத் தக்கன:

இட்டு நிரப்ப முடியாத இடைவெளி

'இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே பெரும் இடைவெளி நிலவுகிறது. இலங்கையின் இனச்சிக்கலுக்கு இணக்கமான ஒரு தீர்வு காண்பதற்கு இது தான் இடையூறாக இருக்கிறது. ஆனால் அந்த இடைவெளியோ இட்டு நிரப்ப முடியாத இடைவெளியாக இருக்கிறது'

'இந்த இனச்சிக்கல் வெறுப்புணர்ச்சியாகவோ, அல்லது வன்முறையாகவோ வளர்ந்துவிட அனுமதிக்கக் கூடாது'

'தீவிரக்காரர்களின் எதிர்ப்புப் பரப்புதலால்தான் வட்ட மிசை மாநாட்டில் இந்த இனச் சிக்கலுக்குத் தீர்வு காணும் பணி மிகவும் ஊறுபடுவதாயுள்ளது'

'இலங்கைத் தமிழர் தலைவர்கள தனிநாடு கோரும் தீவிரக்காரர்களை நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே கிட்டதட்ட பிரிவினை எனனும் அளவுக்கு வரும் தீர்வையே அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்: ஆனல் சிங்களத் தலைவர்களோ, பிரிவினைக்கு வழிகோரும் தீர்வு எதையும் தாங்கள் ஏற்கப் போவதில்லை என்று தங்களின் இனத்தவர்களிடம் விளக்க வேண்டியிருக்கிறது'

— இவ்வாறு செயவர்த்தனே கூறியுள்ளார்

ஆமாம், நாம் ஒன்று கேட்கிறோம் யார் இந்தச் செயவர்த்தன? என்ன சொல்கிறார் இவர்?

இவர் போய், விடுதலைப் போராட்ட இளைஞர்களுக்கும், அவர்களின் அரசியல் தலைவர்களுக்கும் இடையில் கருத்தறிவிக்கிறாரே! அவருக்கு ஏன் அந்தக் கவலை?

விடுதலைப் போராட்ட இளைஞர்களால் தாம் தமிழ்த் தலைவர்கள் இடர்ப்படுவதாகக் கூறுகிறாரே! அவர்களால் இளைஞர்களை நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறாரே!

அப்படி இவருக்கு யார் சொன்னது? தமிழ்த் தலைவர்கள் இடர்ப்படுவதாக இவருக்கு எப்படித் தெரியும்?

தமிழ்த்தலைவர்கள் இளைஞர்களுக்காகத்தான் 'தமிழீழம்' கேட்கிறார்களா? அவர்களுக்கே அந்தக் குறிக்கோள் இல்லையா?' — அப்படி அவர்களுக்கு இல்லை; தீவிரப் போராளிகளை நிறைவு செய்வதற்காகத்தான் அவர்கள் அவ்வாறு பிரிவினை கேட்கும் கட்டாயத்திற்குத் தள்ளப்படுவதாகப் பொருள் வரும்படி செயவர்த்தன பேசுகிறாரே! அவருக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் உள்ள உள்முகத் தொடர்புதான் என்ன?

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம்)

மறவாதீர் மே 5,6-இல் விடுதலை மாநாடுகள்!

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 34 (4-3-84) பகுதி 11

விடுதலைப் பாசறை கட்டமைக்கப்படுகிறது!

வரும் மே மாதம் 5-6-ஆம் பக்கல்களில், தென்னார்க்காடு மாவட்டம், பெண்ணாடகத்தில் 'தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு'ம், 'தேசிய இனங்களின் விடுதலை மாநாடு'ம் நடைபெற விருக்கின்றன. (செய்தி விளக்கம் வேறொரு பக்கத்தில் அச்சாகி யுள்ளது.) மாநாடுகள் சிறப்பாக நடைபெற அனைத்து ஏற்பாடு களும் செய்யப்பெற்று வருகின்றன. தமிழின, தமிழ்நாட்டு மறுமலர்ச்சியையும் விடுதலையையும் விரும்பும் அனைத்து உள்ளங் களும் தவறாமல், தவிர்க்காமல் மாநாடுகளுக்கு வந்திருந்து, நல்ல எதிர்காலத் திட்டங்கள் நிறைவேறுவதற்குத் துணை நிற்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுவாகவே, மாநாடுகளை நடத்துவதிலும் பேரணிகள், ஊர்வலங்கள் போவதிலும் நமக்கு நம்பிக்கையில்லை. ஆனால், குடியரசு நாட்டில், இப்பொழுதைய வல்லாட்சிவதிகாரமும், மக்கள் உரிமைக் கோரிக்கைகளை அடக்கியொடுக்கும் ஆட்சிப் போக்கும் உள்ள நிலையில், நேர்மையான முறையில், நம் கருத்து களை மக்களுக்கும் அரசுக்கும் எடுத்துக் கூற இவற்றைத் தவிர வேறு வழிகள் இல்லை. எனவேதான் நாமும் இடையிடையே கூட்டங்களைக் கூட்ட வேண்டியிருக்கின்றது, பிறர் கூட்டும் கூட்டங்களில் சில நேரங்களில் கலந்துகொள்ளவும் வேண்டி யிருக்கின்றது. ஆனால், இவ்வகை முயற்சிகளே போதுமானவை யாகவும், தொடர்ந்து செய்யக் கூடியனவாகவும் இருக்க வேண்டும் என்பது நம் கொள்கையன்று. மேலும் இத்தகைய மாநாடுகள், பேரணிகள் என்பவற்றைக் கூறிப் பொதுமக்களிடம், பொருளியல் கரண்டல் நடத்துவதும் நமக்கு விருப்பமான செயல் அன்று. நம்மிடம் போதுமான பொருள்வள வாய்ப்பிருந்தால், பொது மக்கள் உதவியில்லாமலேயே இவற்றைச் செய்துகாட்ட இயலும். ஆனால் இதை இப்பொழுது கூறி என்ன பயன்?

இக்கால் நடைபெறவிருக்கும் மாநாடு, நம் எதிர்காலக் கொள்கையையும் நடவடிக்கையையும் ஓரளவு உறுதி செய்யப் பயன்படும் என்றே நாம் கருதுகிறோம். ஆனாலும் இம் மாநாடு நாம் மட்டும் தனித்துக் கூட்டுகின்ற ஒன்றன்று. கொள்கைத் தீவிரமும் மக்கள் நல நோக்கமும் உண்மையான உறுதியான செயற்பாடும் உள்ள நான்கைந்து இயக்கங்கள் கூடி அமைக்கும் மாநாடுகள் இவை. எனவே, வெளிப்படையான பயன் இப் பொழுதைக்குக் குறைவாக இருந்தாலும், எதிர்காலத் திட்ட அமைப்பிற்கு இம் மாநாட்டுச் செயற்பாடுகள் வலிவான அடிப் படைகளைக் கட்டாயம் தோற்றுவிக்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

உண்மையான இனநலன் கருதுபவர்கள் தங்கள் பாங்கில் ஏதாவது இயன்ற அளவு செய்து கொண்டிருப்பார்களே தவிர, பிறரின் செயல்களை மூக்கறுப்பதும், முடக்கம் செய்வதும் ஆகிய தந்நம்பிக்கைக் குறைவான வேலைகளில் என்றும் ஈடுபடக் கூகவார்கள். ஆனால், நம் தமிழினத்தைப் பொறுத்த மட்டில் வசதி வாய்ப்புகளைப் பெற்றவர்கள் பொதுநலத்தையும் ஒரு வாணிகமாகக் கருதி, இவ்வகையில் முயற்சி செய்யும் பிற அணி யினரை ஒடுக்கவும் ஒழிக்கவும் பார்க்கின்றனரே தவிர, எங்கிருந்து வரினும் எவ்வகையில்வரினும் பொதுநல, இனநல முயற்சிகளை வரவேற்றுப் போற்றிக்கொள்ள மனமற்றவர்களாகவே உள்ளது வருந்தத்தக்கது. நம் தமிழினப் பொதுமை நல உணர்வு இன்னும் படிநிலை வளர்ச்சி எய்தவேண்டும் என்பதையே வன்மையாக இது காட்டுகிறது.

இனி, நாம் இன நலத்துக் கென்று முயற்சி செய்கையில், அந் நலத்துக்கான பல்வேறு கூறுகளில் ஒவ்வொன்றுக்குமாக ஒவ்வொரு போராட்டம் நடத்திக் கொண்டிருப்பது தேவையற் றதும், மக்களைத் திசை திருப்புவதுமான ஒரு முயற்சியே என்பது நம் தெளிவான கருத்து. நம் தமிழினத்தைப் பொறுத்த அளவில் நமக்கு வந்துற்ற வீழ்ச்சிகளைப் பார்க்குமிடத்து, நம் இன, நாட்டு விடுதலைக்காக ஒட்டுமொத்தமான ஒரு முயற்சியையே படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டுமேயல்லாமல், வேறு எந்த வகையான சிறு சிறு முயற்சியும் அறவே பயனில்லாமல் போய்விடும் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இந்தியெதிர்ப்புக்காக ஒரு போராட்டம், வகுப்புரிமைக்காக ஒரு முயற்சி, மாநில உரிமைகளுக்காக ஓர் அறைகூவல், என்பன போன்றவையெல்லாம் சிறு சிறு முயற்சிகளே ஆகும். இவையனைத்தையும் உள்ளடக்கிய நாட்டு விடுதலையே இக்கால் நமக்கு வேண்டப் பெறுவது.

இம்முயற்சியில் ஈடுபடும் அல்லது கருத்து வளர்க்கும் இயக்கங்கள் மிகமிகக் குறைவே. 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்னும் கொள்கைக் குரலை ஓங்கி ஒலிக்கவே அஞ்சிக் கொண்டுள்ளவர்கள், தமிழினத்திற்கொன்றும் பெரிதாகச் செய்து விட முடியவே முடியாது, வெறும் விளம்பர வளர்ச் சிக்கும், பொருள் வாய்ப்புகளுக்குமே அம் முயற்சிகள் பயன் படலாம்: ஆனால் தமிழினத்தை முன்னேற்றுவதற்கு அவை ஒரு விரல் நுனியளவும் பயன்பட முடியாது.

இக்கால் நடைபெற விருக்கும் மாநாடுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளவர்கள் ஒன்றும் ஊரை ஏமாற்றி உலையில் போட்டுக் கொண்டிருப்பவர்கள் அல்லர். உண்மையான இன நாட்டு விடுதலைக்காகத் தங்களையே ஈகப்படுத்திக் கொண்டவர்கள். கடந்தகால அவர்களின் தொடர்ந்த வர லாறுகள் இவற்றைத் தெளிவாக உணர்த்தும் அவர்கள் மேல் பல குறைகளும் இழிவுகளும் பழிகளும் கூறிக் கொண் டிருப்பவர்கள் ஒன்றால், அவர்களின் நடவடிக்கைகளை நேரி டையாக உணராதவர்களாக இருக்க வேண்டும்; அன்றால், அவர்கள் நிலைப்பாடுகளிலும் வினைப்பாடுகளிலும் பொறாமை கொண்ட தந்நல உணர்வாளர்களாக இருக்க வேண்டும்: இனி, இவர்கள் செய்கின்ற இடைத்தடுப்புச் செயல்களும், மூடி மறைப்புகளும், ஊடறுப்புகளும், வஞ்சகங்களும், உண் மையான நம் முயற்சிகளுக்குச் சிறுசிறு தொல்லைகளாக இருக்குமே தவிர, எல்லைகளாக இருக்க முடியாது.

எனவே, நடக்க விருக்கும் மாநாடுகள் உண்மையான இனநல, நாட்டு நல உரிமை மீட்புகளுக்கானவை, என்று கருதி, அனைவரும் இவற்றுக்கு ஒத்துழைப்புத்தரக் கேட்டுக் கொள்கிறோம்

விடுதலைப் பாசறை கட்டமைக்கப் பெறுகிறது' இட்டங் கள் வகுக்கப்பெறுகின்றன செயல் மறவர்கள் அனைவரும் தவறாது வந்துகூடி ஒன்றிணைந்து வினைப்பகிர்வு செய்து கொள்ள வேண்டுவது நம் கடமையாகும்! காலக் கட்டாயமு மாகும்! ப

பல்லடத்தில், திருக்குறள் மன்றம் கொண்டாடிய திரு.வி.க. நூற்றாண்டுவிழா!

பாவலரேறு தலைமையில் பட்டிமன்றம்!

கடந்த 26-2-84 ஞாயிறு மாலை 6, மணியளவில், பூங்குயிலிசைக் குழுவினரின் திரு.வி.க.வைப்பற்றிய இசைப் பாடல்கள், தென்மொழிப்பாடல்கள் இவற்றுடன் விழா தொடங்கியது. திருவாளர்கள் வயிரவசாமி, பொன்னையன், சோசப், பால்ராசு, தண்டபாணி, போசு இராமசாமி ஆகியோர் இணைந்தும் தனித்தும் கருவிகளுடன் பாடி மக்களின் உள்ளங்களை ஈர்த்தனர். மன்றச்செயலர் திரு தென்மொழி முத்துக்குமரனார் வரவேற்புரை யாற்றினார்; புலவர் செந்திரு க.ரு. சிவாச்சலனார் தலைமையேற்று, திரு.வி.க. பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார். இறுதியில் பட்டிமன்றம் நடந்தது. பாவலரேறு நடுவராக விளங்கினார். நடுவர் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் முன்னுரைக்குப் பின் 'திரு.வி.க. வாழ்வில் பெருஞ்சிறப்புப் பெறுவது தமிழ்த் தொண்டே என்ற அணியில், புலவர் கு. மாணிக்கனார், புலவர் நெறிமுடியார் ஆகியரும், அரசியல தொண்டே என்ற அணியில் புலவர் ப. வீரப்பனார், புலவர் கா. மருதமுத்தனார் ஆகியரும், தொழிலாளர் தொண்டே என்ற அணியில் தோழர்கள் தோ. சு. வேங்கடேசனார், ப. வயிரவசாமி ஆகியரும் பட்டிமன்றத்தில் இனிமைச் சுவை, நகைச்சுவை அறிவுச்சுவை நிரம்ப வழக்காடினார்கள்.

பாவலரேறு தம் இறுதியான பட்டிமன்றத் தீர்ப்புரையும் முடிவுரையுமாக ஏறத்தாழ 2-30 மணிநேர உரையில் மக்க ளின் இன்றைய அரசியல், மொழி நிலைகளைச் சுட்டிக்காட்டி, திரு. வி. க வின் பெருமைமிகு வாழ்வின் கூறுகளை பொது மக்களும் எளிதில் விளங்குமாறு இனிதே எடுத்தியம்பினார்கள். பாவலரேறு அவர்களின் கருத்துரையை மக்கள் நள்ளிரவு 12 மணிவரை அமர்ந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. இறுதி யில் திரு வி.க வாழ்வில் தொழிலாளர் தொண்டே பெருஞ் சிறப்பு பெறுவது' என்பது இன்றைய பட்டிமன்றத்தின் தீர்ப்பாயினும் மொழிவழி அரசியலில் ஈடுபட்டார்; மூலக் கருவியும் களமுமாக அவற்றுக்குத் தூய தமிழ்மொழியையே பயன்படுத்தினார் திரு.வி.க: என்பதைப் பலவகைச் சான்று களுடன் நிறுவிக்காட்டினார்.

மன்றப் பொருளாளர் திரு சண்முகம் அவர்களின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிது நிறைவுற்றது. கூட்டத் திற்கு உள்ளூர் வெளியூர் உ.த.மு.க. அமைப்பாளர்களும், தென்மொழி அன்பர்களும், பொதுமக்களும் பெண்டிரும் நிறைந்து வந்திருந்தனர்.

தமிழ்-பிரெஞ்சு-

அகரமுதலி வெளியீடு.

சென்னையில் உள்ள பாரத மாநில வைப்பக அதிகாரிகள், தங்கள் இயல்பான பணிகளுக் கிடையில், தமிழுக்கு ஆக்க மான சில செயல்களிலும் ஈடு படுவது நமக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

அவ் வைப்பகத்தில் 'சங்க இலக்கிய அணி' என்று ஓரணி உள்ளது. அவ் வணி, தமிழ்-பிரெஞ்சு, பிரஞ்சு-தமிழ் அகரமுதலி (அகராதி) ஒன்றை வெளியிட்டுள்ளது. இச் செயல் அவர்களை மிகவும் பாராட்டுக்குரியதாக ஆக்கி யிருக்கிறது. இவ் வைப்பகத்தில் பணியாற்றும் திரு.ந.கைலாசம் என்பவர் எழுதிய அகர முதலியை அதன் இலக்கிய அணியினர் வெளியிட் டுள்ளனர். உண்மையான தமிழுணர்வும், தமிழறிவும் இருந்தால், எவரும் எத்துறை யில் ஈடுபட்டிருந்தாலும் தம் தாய்மொழி தமிழுக்காகவும் அவர்கள் உழைக்க முடியும், என்பதை மெய்ப்பித்துக் காட்டிய அவ்வகரமுதலி ஆசிரியர் திரு. ந. கைலாசம் அவர்களையும், அவருக்கு ஆக்க வளித்த பாரதமாநில வைப்பக' அதிகாரிகளையும், அதன் இலக்கிய அணியினரையும் நாம் உள்ளம் மகிழ்ந்து பாராட்டுகிறோம்.

மேலும் இவ் விலக்கிய அணியினர் தமிழ் ஆக்கத்திற் கான பல பணிகளில் ஈடு பட்டுள்ளனர் என்று அறிய மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இக்கால் தமிழ்த்துறையிலேயே பணியாற்றி வருவதாகக் கூறப்பெறும் தமிழ்ப்பேராசிரி யர், தமிழாசிரியர்கள், தமிழறி ஞர்கள் எனப்படுவோரெல்லாம், வெறும் வெற்று ஆரவார வேலைகளில் ஈடுபட்டும், திரைப் படங்களின் திறனாய்வு செய்து பொழுது போக்கியும் தமிழ்க் கென ஒதுக்கிய பொருள் வளத்தைத் தின்று தீர்த்து வாழ்க்கை நடத்தி வருகையில் தமிழ்மொழித் தொடர்பற்ற நடுவணரசின் அதுவும் பணப் புழக்கம் கொண்ட ஓர் அலு வலகத்தின் ஓயாத பணிகளுக் கிடையிலும், தமிழ்மொழிக் கெனத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு, தமிழை மேம்பாடுறச் செய்வது மிகமிகப் போற்றி வணங்கக் கூடிய செயலாகும்.

பெரும்பாலும் பிறஇடங் களில் படிப்பகம் இருக்குமே தவிர, நூலகம் கூட இராது. அதுவும் அப் படிப்பகங்களில் கழிகாமக் கழிசடை இதழ்கள் படிக்கப்படுவதை நாம் நேரில் பார்த்துப் புழுங்கியிருக்கிறோம்.

இந்நிலையில், சென்னையில் உள்ள,பாரத மாநில வைப்பகம் பணியாளர்கள், தம் ஓய்வு நேரங்களில் இவ்வாறான தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும், பொது மக்கள் தொண்டிலும் ஈடு படுவது, மற்ற வைப்பகங் களிலும், மாநில, நடுவண் அரசு அலுவலகங்களிலும் உள்ளவர்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டும், வழிகாட்ட லும் ஆகும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறோம்! O

மாநாட்டிற்கு அன்பளிப்பை அள்ளித் தருக!

அன்பு நெஞ்சங்களின் ஆர்வ மடல்கள்!

உருவாகும் தமிழீழம்

விடுதலை அடலேறு ஐயா அவர்கட்கு,

வணக்கம். நலம் நலமே,வாழி! தங்களின் தூய தமிழ்நெஞ்சை 5-2-1984-ஆம் நாளிட்ட 'தமிழ் நிலம்' கிழமை இதழ்வழி பார்த்துப் பெருமிதமும் உளநிறைவுங் கொண்டு இம்மடல் உருவானது.

அமிழும் தமிழினம் தங்களன்ன தலைவரை உணர்ந்து ஏற்று இணைத்து, ஒன்றிச் 'செய்தக்க'ச் செய்யின் தமிழீழம தோன்றல் திண்ணம் என்ப தோடல்லாமல் எண்ணிய எண்ணியாங்கு எய்து பாரிசைக்க ஏற்றம்பெறும் என்பதென் எண்ணம்:

திருப்புகழ் பாடும் திருக்குறள் மானம்
உருப்பட ஒன்றி உணர்க!—பெருமினமே!
தங்கதுரை குட்டிமணி தங்குலமே மீள
தமிழீழம் தோன்றியபின் தூங்கு!

அடுக்கடுக்காய் உயிர்குடிக்கும் இலங்கை மக்கள்
அஞ்சாது கற்பழிக்கும் சிங்களத்தார்
குட்டிமணி தங்கதுரை சகனின் மாட்சி
கொடுங்கோலன் செயவர்த்தன் கயவ ஞட்சி

ஒடுங்கிடவே தமிழினமே! ஒன்றே நின்று
ஒருடலின் அரத்தமென அகத்தே நாடு!
உடன்பிறப்பாய்ப் புறம்பாடி முரசைக் கொட்டு!
உருவாகும் தமிழீழம்! அரசை நாட்டு!

செந்தமிழ் உணர்வூற்றில் உருவானதைத் தமிழ் நெஞ்சத்தின் பார்வைக்கு அன்புடன் அனுப்பி மகிழ்கிறேன். நன்றி வணக்கம்.

புலவர் வழக்கறிஞர் கோ. உள் ஒளி அறி. இ.ச,இ,

ஞாயிறை மறைக்க முடியுமா?

ஐயா, வணக்கம் பல,

ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு திருப்பூர், நகரமண்டபத்திடலில் கொடியேற்றி கொட்டும் மழையிலும், இன்னல் பொருட்படுத் தாது, கொள்கை முழக்கம் தாங்கள் செய்ததை அன்று செவிமடுக்கும் பேறு பெற்றேன். அதுமுதல் தங்கள்மீது பற்றுக் கொண்டேன். அதன்பின் சிறிது காலம் சென்றபின்பே தென்மொழி, தமிழ்ச்சிட்டு தமிழநிலம் ஆகிய இதழ்களைப் பற்றி அறிந்தேன். அதற்குமுன் அறியவில்லை. வாய்ப்பும் கிட்டவில்லை.

தங்களுடைய பல்வேறு பணிகளின் தன்மையை பொருளியல் இடர்ப்பாடுகளை, அரசியல்காரர்கள் குறிப்பாகத் தமிழ்மொழி வஞ்சகர்களின் சூழ்ச்சி களால் ஏற்படும் இன்னல்களை, பொருட்படுத்தாது மிக்க இடர்ப்பாட்டின் பேரிலேயே இதழ்கள் கால நீட்டில் வெளிவருகின்றன என்பதனை. ஐயா அவர்கள் முன்பு எழுதியுள்ள விளக்கத்தினைப் படித்து அறிந்து கொண்டேன்.

தமிழுக்காக, தமிழனுக்காக, தமிழ்நாட்டிற்காக, ஈழத் தமிழனுக்காகப் பாடுபடும் தங்களை, தமிழ் நிலத்தின் அச்சகத்தை தமிழீழம் குருதி வெள்ளத்தில் நனைந்தபொழுது, மூடிவிட்டார்கள் என்பதனைக் கூட யானறிந்த வரையில் 'தினகரன்' நாளிதழ் மூலம் மட்டுமே அறிந்து, தெரிந்து கொண்டேன். 'தமிழ்நிலம்' என்று ஓர் இதழ் வெளி வருவதுகூட, வெளி உலகினர் அறியாவண்ணம் மூடிமறைக்கப் பார்க்கிறது இந்த அரசு என்றால், அதன் செய்தியைக் கூடச் சேர்ந்து மறைக்கின்றன பிற வால் பிடிக்கும் இதழ்கள்:

தூய தமிழ்த் தொண்டாற்றி வரும் தங்களை மறைத்துவிட யாராலும் முடியாது. 'ஞாயிறை மறைக்க முடியுமா? தங்களது தமிழ்த் தொண்டினை யாராலும் மறைக்க இயலாது. அகவை 23 ஆயினும். தங்களைப் பற்றி எனக்குத் தெரிந்த, சந்திக்க நேர்ந்த தமிழாசிரியர்களிடத்திலே வினவியபோது, மிக்க பெருமையுடன் கூறினார்கள். நெஞ்சம் பூரித்தேன். ஐயா, வேறென்ன வேண்டும்? தமிழறிந்த இடமெல்லாம் தாங்களே! யாராலும் நிரப்ப இயலாது.

திரைப்படப் பெருமையும் கழிசடை அரசியல் பேசுவோரையும் மீட்டு, நல்வழிப்படுத்தித் தமிழகத்தை உயர வைக்கும் தங்கள் எண்ணத்திற்கும், செயலுக்கும் என் பணிவார்ந்த நன்றி! உ.த.மு.க. கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நான் தமிழுலகத் தொண்டாற்ற விரும்புகிறேன்.

ஐயா, நமது கொள்கையை, நாம் தூவிக் கொண்டே இருப்போம். விரைவில் பயன் கிட்டா விடினும், என்றாவது ஒருநாள், உண்மைநிலை உணர்ந்த தமிழன் ஆட்சிக்கு வரும்பொழுது அந் நிலைக்குக் காரணியமே நமது இயக்கம்தான் என்பதை அறிவான்! எனவே, வருந்த வேண்டாம். தங்களின் தொண்டு, 'விழலுக் கிறைத்த நீரன்று'. நான் அறிந்த வரையில் பிறமொழிச் சொற்கள் கலவாமல் இக் கடிதத்தை எழுதியுள்ளதாக உணர்கிறேன். இதற்குக் காரணம் 'தங்களது எழுத்தாற்றலே' என்பதுதான் உண்மை.

எங்களைப் போன்றவர்களுக்கு, பயிர் கண்ட வான்மழை போல, எங்களது உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்க, உங்களது தமிழமுதமே காரணம். தாய்ப் பாசத்தினைப் போன்று, கீழிறங்கி விட்ட இத் தமிழருக்காக, அல்லும், பகலும் அயராது பணியாற்றி வரும் தங்களை எண்ணுகையிலேயே, மனம் பூரிப் படைகின்றது. பற்றின் மிகுதியால் இக்கடிதம் நீண்டுவிட்டது. ஐயா அவர்கள் அதற்காக மன்னிக்க வேண்டும். ஐயா வாழ்க! வளர்க தமிழ்த் தொண்டு! என்று கூறி இம் மடலை முடிக்கிறேன்.

இங்ஙனம்
பணிவார்ந்த வணக்கத்துடன்,
தங்கள், பெரி. இரத்தினம், திருப்பூர்-1

ஒன்றுபட யாரிடம் சொல்வது?

திருமிகு ஆசிரியர் தமிழ்நிலம் அவர்கட்கு வணக்கம்; நன்றி. பல்வேறு இடர்ப்பாட்டுக் கிடையேயும் தமிழ்த் தொண்டு புரியும் தங்கள் சான்றாண்மையை நன்றியுடன், போற்றுகிறேன்.

பல்வேறு துறைகளிலும் பிரிந்து தமக்குளே வேறுபட்டு நிற்கும் நம் தமிழ்நிலம் கருதும் தலைவர்கள் எல்லாம் ஒன்றான ஓர் அமைப்பில் இருந்து, செயல்படின், பகைவர்க்கு இடம் இராதே என்ற தணியாத விருப்பத்தை, யாரிடம் முறையிடுவது என்றே எனக்கு விளங்கவில்லை; தாங்களாவது சிலபல குறை மறந்து, நல்லதின் பொருட்டு திருவாளர்கள். சாலை, இளந்திரையன், கலைஞர், வீரமணி, அப்துல்சமது, கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றோருடன் ஓர் அமைப்பினை உருவாக்கி அரசியல், குமுகாயம், மொழி என்ற பிரிவுகளில் செயல்பட, முயற்சி மேற்கொள்ளக்கூடாதா? அதனாலேனும் பகைவர் எண்ணங்கள் நொறுங்காதா என்ற அவாவினையுடையவனாக இருக்கிறேன்.

நன்றெனின் ஆய்வு செய்யுங்கள்!
இன்றெனின் ஒதுக்கிவிடுங்கள்.

வணக்கம். நன்றி,
— பழனி. எழில்மாறன், கொடைரோடு.

உணருவார்களா?

அன்புத் தமிழ் நெஞ்சத்திற்கு வணக்கம்.

ஐயா தாங்கள் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடித்தாற்போல எழுதியிருக்கின்றீர்கள் வெகு அருமை அருமை! அருமை! (தமிழ் நாடு அனைத்துக் கட்சிகளின் அறுவடைக் களம்) இவற்றை எல்லாம் அந்தப் படுகேடர்கள் உணர்கின்றார்களா! அவர்கள் கையில் இந்த இதழ் கிடைத்தால் உணருவார்கள்.

— பெ. புகழேந்தி, மூர்த்திக்குப்பம் கடலூர்.

பாரதியார் பாடல் தொகுதிபோல் பாவேந்தர் பாடல் தொகுதி வரவேண்டும்! அதற்கு ஆவன செய்யுங்கள்!

தமிழினக் காவலர் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, அன்பார்ந்த ஐயா, வணக்கம்.

பாரதியார் பாடல்கள் பற்றிய தங்கள் கருத்துகளைத் 'தென்மொழி'யிலும் 'தமிழ்நிலத்'திலும் படித்தேன். பாவேந்தர் பாடல்களையும் அதே வழியில் பரப்பவேண்டியது நமது கடமை என்பது அனைவருக்கும் ஏற்புடையதே.

இது தொடர்பாக ஒரு கருத்தை மட்டும் தங்கள் பார்வைக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தொடக்கத்திலிருந்தே பாரதியார் பாடல்கள் அனைத்தும் ஒரே தொகுப்பாக மலிவு விலையில் கிடைக்கின்றன. முதலில் உருபா ஒன்று விலையில் பாரதியார் பாடல்கள் கிடைத்ததாக நினைவு. பின் விலைநிலை ஏற்றத்தால் படிப்படியாக உயர்ந்து இப்போது உரு 10-00 விலையில் அப்பொத்தகம் கிடைக்கிறது.

பாவேந்தர் பாடல்கள் அவ்வாறே ஒரு தொகுப்பாகக் கிடைக்காதது பெருங்குறை என்று எண்ணுகிறேன். பாரதியார் பாடலகள் அனைத்தும் 10-க்குக் கிடைக்கும்போது, பாவேந்தர் பாடல்கள் ஒரு தொகுதிதான் அவ்விலைக்குக் கிடைக்கும். பாவேந்தர் படைப்புகள் அத்தனையையும் ஒருசேர வாங்குவதும் கடினம்: விலையும் நூறு உருபாயைத் தாண்டும்.

பாரதியார் பாடல்களைப் போல ஒவ்வொரு தமிழர் கையிலும் ஒவ்வொரு வீட்டிலும் பாவேந்தர் பாடல்கள் நிறைந்திருக்க வேண்டுமானால் இப்போது தனித்தனியாகக் கிடைக்கும் தொகுதிகள் யாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே தொகுப்பாக மலிவு விலையில் வெளியிடவேண்டும். அதற்கு, வெளியீட்டாளர்கள் வெளியிடுவதற்கும், தமிழர்கள் வாங்குவதற்கும் முன்வரவேண்டும். வணிக நோக்கில் வெளியீட்டாளர்கள் தயக்கம் காட்டுவர். எனில் தாங்களே அதற்கு முன்வரவேண்டும். தங்கள் இதழ்களை வெளியிடுவதற்கே அல்லலுறும் தாங்கள் இவ் வெளியீட்டில் பெருந்தொகையினை முடக்க முடியாது.

எனவே தமிழர் நலம் கருதித் தமிழ் வெளியீட்டாளர்களைத் தாங்கள் அணுகி அவர்களுக்குத் தேவையான வழி வகைகள் காட்ட வேண்டும்.

இப்போது கிடைக்கும் பாவேந்தர் பாடல் தொகுதிகள் ஒரு பக்கத்திற்கு ஒரு பாட்டு என்ற முறையில் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருப்பதால் பக்கம் அதிகமாகத் தெரிகிறது. அச்சு அளவைக் குறைத்துப் பக்கங்களில் தேவையற்ற அளவு வெறுமனே விடாமல் நிறைத்து வீணாக இடத்தை அச்சிட்டால் பக்கங்கள் குறையும். அது விலை குறைய உதவும்.

தமிழ் வெளியீட்டாளர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டவேண்டும். அல்லது தாளிகைகளின் முகவர்களை அணுகி இத் தமிழ்ப் பணிக்கு அவர்களை உடன்படச் செய்யவேண்டும்.

அதற்கும் வழியில்லை என்றால் பாவேந்தர் கழகக் கிளைகள் ஒன்று சேர்ந்து இப்பணியில் ஈடுபட வேண்டும். தேவையானால் பொத்தகம் அச்சிடுவதற்கு முன்னரே முன்பதிவு செய்யும் முறையில் தமிழன்பர்களிடமிருந்து உரிய விலையை முன்பணமாகப் பெற்று அச்சிடலாம். அவ்வாறாயின் அதிக மானவர்கள் முன் பதிவு செய்யும் வகையில் உ. த.மு.க. அன்பர்கள் ஊர்தோறும் முன்பதிவில் ஈடுபடவேண்டும்.

எவ்வாறாயினும் மிக அதிக அளவில் அச்சிட்டுப் புத்தகக் கடைதோறும், ஊர்தோறும் தமிழ் இல்லந்தோறும் தமிழ் அன்பர்கள் கையெல்லாம் பாவேந்தர் பாடல்களின் முழுத் தொகுதியும் தவழ்ந்தால்தான் தாங்கள் எதிர்பார்ப்பது போன்ற மாற்றம் ஏற்பட முடியும் என்பது என் நம்பிக்கை.

தங்கள் உரையைப் படித்தபின் எழுந்த எண்ணத்தின் அடிப்படையில் இக்கருத்தைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஆவன செய்யுங்கள்.

அன்பன்,
— பா. பாக்கியராசு, ஏரல்.

• வெள்ளத்தைத் தடுக்கக் கடலில் அணை!

சோவியத்து ஒன்றியத்திலேயே இரண்டாவது மிகப் பெரிய நகரமாகிய இலெனின் கிராடு, அண்மையில் வெள்ளத்தினால் தாக்கப்பட்டது. தொழிற்சாலைகள் நிறைந்ததும், ஏறத்தாழ 50 இலக்கம் மக்கள் தொகையுடன் கூடியதுமான இலெனின் கிராடு நகரம், பால்டிக் கரையோரத்தில், நேவா ஆற்றின் கழிமுகத்தில் உள்ளது பின்லாந்து வளைகுடாவிலிருந்து மழையும் பனிப் புயலும் அடித்த பொழுது, நேவா ஆற்றின் தண்ணீர் மட்டம் இரண்டேகால் மாத்திரி (மீட்டர்) உயரம் அதிகரித்தது. ஆற்றங்கரை ஓரப் பகுதிகளில் போக்குவரத்தும் மின்விசைக் கொடுப்பும் தாக்கப்பட்டன. ஆனால் உடனே வெள்ளம் வடிந்து விட்டதால், சேதமான பகுதிகள் விரைவில் செப்பனிடப்பட்டன.

இந்த நகரம் தன் வரலாற்றில் 300 முறை வெள்ளத்தினால் தாக்கப் பட்டிருக்கிறது, வெள்ளத்தைத் தடுக்க பின்லாந்து வளைகுடாவில் தொடர்ச்சியாக 25 அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) நீளத்திற்கு அணைகள் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் கப்பல் போக்குவரத்துக்கான இரண்டு இடைவெளிகள் இருக்கும். அவற்றில் ஒன்று 110 மாத்திரி (மீட்டர்) அகலமும், மற்றொன்று 200 மாத்திரி (மீட்டர்) அகலமும் உள்ளதாக இருக்கும். இந்த அணைகள், மீன் நடமாட்டத்தைத் தாக்காது. வெள்ள அச்சுறுத்தல் ஏற்படும் பொழுது அணைகளின் கதவுகள் மூடப்படும். ஒரு பொத்தானை அழுத்தினால் பல எல்லன் (டசன்) கதவுகள் ஒரே சமயத்தில் தாமாகவே மூடிக் கொண்டு, நகரை நோக்கி வெள்ளம் வருவதைத் தடுத்து விடும்.

அயலவர் சூழ்ச்சி, நீ அறியாத கலையா?

ஏழை மக்களை வாட்டும் கையூட்டு (இலஞ்சம்)

அரசு அலுவலகங்களாயினும் சரி தனியார் அலுவலகங்களாயினும் சரி, கையூட்டு, தன் நச்சுப் பற்களால் எளியரின் உடலைக்கீறிக் குருதியைக் குடித்து வருகின்றது. நாகரிக முதிர்ச்சியடையாக் காட்டு விலங்காண்டிக் காலத்தில் கூட மாந்தனை மாந்தன் அடித்துத் துன்புறுத்துதல் அவ்வளவாக இல்லை. நாகரிகத்தின் நுனிக் கொம்பர் என்று சொல்லப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் மாந்தரின் எண்ணங்களும் செயல்களும் கரவும் கயமையும் மலிந்து உள்ளன. அந்த அளவில் பார்த்துக் கொள்வதில் மாந்தன் விலங்கினும் கீழாய் இழிகின்றான்.

கையூட்டு வாங்குவதற்குப் புதுப்புது வகையாய்ப் பொருள்கள் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் கையூட்டு என்பதற்கு தமிழ் அகரமுதலியில அற வழியில் பொருள் கூறப்பட்டாலும் இறும்பூது எய்துவதற்கில்லை.

கையூட்டுப் பெற்ற ஒருவன் அகமும் முகமும்மலர என்னமாய் வரவேற்கின்றான். எத்துணைதான் உயர்ந்த அலுவலராய் இருந்தலும்கூட கொடுக்கும் கூலியின் மதிப்புக் கேறபத் தன் நிலையினின்று மெதுவாகவோ அன்றி விரைவாகவோ இறங்கிக் கொடுத்தாரின் புறத்தை ஒக்கிர்கூடத் தன்னை இழிஞனுக்கிக் கொளகின்றான். பருத்தியில் இழையும் மேற்பை காற்பைகள் பட்டிலோ அன்றி 'வெல் வெட்டிலோ' மின்னுகின்றன. தன் மனையாட்டியைப் புதுப்புது பொன் அணிகளால் குளிப்பாட்டுகின்றான். தன் உறையுளை ஏழ்நிலை மாடங்களாக உயர்த்து கின்றான். தோட்டம் தரவுகள் வாங்குகின்றான். வாயெல்லாம் பல்லாக இளிக்கின்றான். முறையாகச் செய்ய வேண்டிய செயல்கூடக் கையூட்டு இல்லாமல் நடப்பதில்லை.

ஒரு குறிப்பிட்ட திணைக் களங்களில் மட்டுமே தன் வெறியைக் காண்பித்த கையூட்டு இன்று எல்லாத் திணைக்களங்களிலும் புகுந்து கொண்டு அல்லோல கல்லோலப் படுத்துகின்றது.

கையூட்டு பறங்கியன் காலத்தில் வந்ததென்பர். அதற்கு முன்னரும கையூட்டு இருநததற்கு வரலாறு உண்டு. கையூட்டு கொடுத்தல், பெறுதல் என்பன ஒரு முதலாளிய இயக்கமாகும். ஏழைத் தொழிலாளரின் குருதியைக் குடிக்கப் பணவெறியர்கள் கொண்டு வந்ததுதான் இந்தக் கையூட்டு. அது பணமாகவோ அன்றிப் பண்டமாகவோ தரப்படும். பண்டமாகத் தரும் கையூட்டுச்குத்தான் நாகரிகப் பொருள் கற்பிக்கப் படுகிறது. பண்டம் பல வழிகளில் மாறுபடும். மாந்தனின் துய்ப்பு நிலைக்கேறப அவர வரின வேட்கைக் கேற்பக கொடுக்கப்படும் கையூட்டு மதிப்பல் சிறிதாயினும் வேட்கையின் அளவால் அவரவரின் துய்ப்பு உணர்வுகளான் அதன் உயர்வு கொள்ளப்படும். சிறுபொடியில் இருந்து உண்டியில் இருந்து பெண்டிர் வரை கையூட்டுகளாகக் கொடுக்கப் படுகின்றனர்.

அந்தோ மாந்தனே! நீயா பகுத்தறிவு உள்ளவன்? நீயா பிற உயிரினங்களை விட உயர்ந்தவன் நீயா நல்லவை கெட்டவை அறிந்தவன். இல்லை. இல்லை. எல்லாவற்றைக் காட்டிலும் நீ பேசத் தெரிநத விலங்கு

இன்று அரசியற் கயவர்கள்தாம் கையூட்டுகளை வளர்ந்து வருகின்றனர். அஃது அவர்களின் தந்நலத்திற்காக. மன்பதைப் பொதுமையே எங்கள் கட்சியின் கொள்கை என்று வாய் கிழியக் கத்துவோனாக இருந்தாலும் கூட அவனும் கையூட்டை வளர்த்துத்தான் வருகின்றான்.

இந்தக் கையூட்டை யார் கொடுக்க முடியும். அன்றாடம் தன் வயிற்றைக் கழுவ முடியாத நிலையில் உள்ளவன் கொடுக்க முடியுமா? பணக்காரன்தான் கொடுக்க முடியும். பெற்றுக் கொள்பவன் அவனிடம் தானே குழைகின்றான். நெளிகின்றான். பணம் இன்னும் பணத்தைச் சேர்த்து மலையாகின்றது. பள்ளம் இன்னும் பள்ளமாகிக் கொண்டே உள்ளே, போகின்றது.

• என்றாவது ஒருநாள் அந்த மலையே ஆட்டங் காணத்தான் செய்யும் அடி வாங்க வாங்கத்தான் கூனும் நிமிரும். அப்போது பள்ளம் மேடாகும் மலைகள் பொடிப் பொடியாகும் அந்த நிலை வருமா? வரத்தான் வேண்டும்.

ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிடின் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆகிடுவார் உணரப்பா நீ!

— பாரதிதாசன்,

— எவ்வி.

மாசுக்கோவில் 1000 பள்ளிக்கூடத் திரைப்பட அரங்குகள்

மாசுக்கோவில் 1000 பள்ளிக்கூடங்களில் திரைப்பட அரங்குகள் கட்ட, இதற்கென அண்மையில் அமைக்கப்பட்ட நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இப்பொழுது மாசுக்கோவில் 1 00-த்திற்கு அதிகமான இரண்டாம் நிலைக் (செகண்டரி) கல்விப் பள்ளிகளில் திரைப்படங்கள் திரையிடுவதற்கான வசதிகள் உள்ளன; இவற்றில் 100 பள்ளிகளில் திரைப்பட அரங்குகள் உள்ளன. சோவியத்துப் பள்ளிச் சிறுவர்களுக்குத் திரைப்படங்கள் காட்டுவது பொழுது போக்குக்காக மட்டுமன்று கல்வி அறிவை வளர்ப்பதற்கும் கலைச் சுவை உணர்வை வளர்ப்பதற்கும் திரைப் படங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

குழந்தைகளுக்கான திரைப் படங்கள் உருவாக்குவதில் சோவியத்து ஒன்றியம் சிறப்பு கவனம் செலுத்துகிறது. சோவியத்து ஒன்றியத்தில் ஆண்டுதோறும் குழந்தைகளுக்காக 30-க்கும் அதிகமான முழு நீளக் கதைப் படங்களும், மற்றும் பல சித்திரப் (கார்ட்டூன்) படங்களும், கல்விப் படங்களும் உருவாக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள 39 திரைப் படம் பிடிப்பகங்களிலும் குழந்தைகளுக்கான படங்கள் உருவாக்கப்படுகின்றன மாசுக்கோவில் குழந்தைகளுக்கான படங்கள் உருவாக்கும் கோர்க்கி நடுவண் திரைப்பட பிடிப்பகம் இவற்றில் முதலிடம் பெறுகிறது. உலகத்திலேயே இத்தகைய திரைப்படப் பிடிப்பகம் இஃது ஒன்றுதான் உள்ளது.

குழந்தைகளுக்கான திரைப்பட அரங்குகளும், சோவியத்து ஒன்றியத்தில் ஏராளமாக உள்ளன. மாசுக்கோவில் உள்ள நடுவண் குழந்தைகள் திரைப் படஅரங்கு அவற்றில் முகாமையானது. இவை தவிர, முதியோருக்கான திரைப்பட அரங்குகளிலும், குழந்தைகளுக்கான படங்கள் திரையிடப்படுகின்றன

குழந்தைகளுக்கான திரைப்பட நுழைவுச்சீட்டின் விலை 10கோபெக் (காசு) தான்.

ஆண்டுதோறும் சோவியத்து ஒன்றியத்தில் தேசியக் குழந்தைகள் திரைப்படக் கிழமை கொண்டாடப்படுகிறது 1983-இல் "அலோ, இசுக்கூல்" 'தேவதைக் கதை" போன்ற புதிய திரைப்பட விழாக்களும் தொடங்கப்பட்டன. உலக அரங்கில் சோவியத்துக் குழந்தைப் படங்கள் மிகுந்த மதிப்புப் பெற்றுள்ளன.

'அண்ணு!

"என்ன தம்பி?"

"தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு பொன்மொழியைக் குடியரசுத் தலைவர் கூறியிருக்கிருரே, பார்த்தீர்களா?"

"எங்கு, எப்போது கூறினுர்."

"குடியரசு நாள்அன்று அனைத்துலகப் பாஞ்சாபி மாநாட்டைத் தொடங்கிவைத்தபோது, மாநாட்டில் பேசியவர்கள் எல்லோரும் பஞ்சாபி மொழியில் பேசாமல் ஆங்கிலத்திலேயே பேசியதைக் கடிந்து அந்தப் பொன் மொழியைக் கூறியிருக்கிருர்,"

"அஃது என்ன பொன்மொழி தம்பி!"

"தங்கள்சொந்த மொழிக்கு மதிப்புஅளிக்காதவர்கள், மற்றவர்களிடமிருந்து மதிப்பை எதிர் பார்க்க முடியாது" என்று கூறியிருக்கிருர்

"மெய்தான், தமிழர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றுதான் இது.

"அண்ணு! அந்த மாநாட்டில் பேசியவர்கள் எல்லோரும் இந்தியில் பேசியிருந்தால் குடியரசுத் தலைவர் இப்படிக் கூறியிருக்க முடியுமா?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

— தமிழவேள்

அண்மையில் தமிழீழத்தில் நடந்த உண்ணுநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரமாணவி தன் தாய்க்கு எழுதிய வீரவரிகள்!

(தூய தமிழாக்கப்பட்டுள்ளது)

அன்புள்ள அம்மா,

தாயாரின் பாசம் வலிமை மிக்கது என்பதை நான் உணராமல் இல்லை, பத்து மாதம் சுமந்து பாசமுடன் வளர்த்துவிட்டு, இப்போது பார்க்கையில் வயிறுபற்றி எரிகிறது என நீ என்னை வந்து பார்த்து விட்டு அழுதாய்.

எதிர் காலத்தில் தமிழனுக்குத் தக்க பாதுகாப்பு நல்வாழ்வே கிடையாது. அவன் வாழ்வு பெற வேண்டும், அவன் தன் நிலையான விடிவுக்காக விடுதலை பெறவேண்டும் என்று உணர்ந்திருப்பாய்.

நீ, ஈகப் (தியாகப்) போரில் குதித்திருப்பாயானுல் இன்று நாம் எமது சாவு (மரணத்து)க்கான நாள்களை எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. ஆனுல் உன்னுல் அது முடிந்திருக்காது. ஏனெனில் நீ இன்று அழுதது போன்று அன்று உன் தாயாரும் அழுதிருப்பாள். நீ அடங்கியிருப்பாய் இஃது ஒரு தொடர்கதையாக நீடிக்கக் கூடாது. எமது எதிர்கால வழிமுறையினரும் எம்மைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்கக் கூடாது. இதனுல்தான் நான் இந்த ஈகப் (தியாகப்) போரில் குதிக்கிறேன்.

அன்புமகள்,

இ:லலிதாநடராசா.

அவலூர்ப் பேட்டை உ.த.மு.க. வின்

பொங்கல் விழா.

கடந்த 29-1-84-ஆம் பக்கல் ஞாயிற்றுக் கிழமை அவலூர்ப்பேட்டை சிவன் கோயிலில் குறிப்பிட்டபடி உ.த மு. கழகத்தினரால் பொங்கல் பெருவிழா சிறப்புற நடைபெற்றது.

காலை நிகழ்ச்சியாக அன்று காலை 9-30 மணியளவில் மாணவர்களுக்குக் கட்டுரைப்போட்டியும், பேச்சுப் போட்டியும் - உ த.மு.க. வட்டத் தலைவர் மருத்துவர் கோ. சரவணன் இ.ம,அ,இ., (M.B.B.S.) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிற்பகல் 3-மணி அளவில் தொடங்கப் பெற்ற பொங்கல் விழாவில் வட்டச் செயலர் திரு. தா. நெஞ்சிற்கினியன் வரவேற்புரையாற்றினுர். அதன் பிறகு வட்டத் தலைவர் திரு கோ. சரவணன் தலைமையின் கீழ், திரு கோ. தமிழரசன் க.மு கல்.மு:, வடவார்க்காடு மாவட்டச் செயலாளர் உலகமுதல்வன், சர்க்கரை சுவாமிநாதன், புலவர் பெருமாள், புலவர் அப்பாசாமி, கி.கோவிந்தராசன், சு. தட்சணமூர்த்தி, இரா. கேசவன், ஏ.கே. சீனிவாசன் (அவலூர்ப் பேட்டை துணை-உண்ணோட்டகர் (Sub-Inspector) ஆகியோரின் நிறைவான சொற்பொழிவுகளுக்குப் பின், கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் தேர்ச்சியுற்ற மாணவ, மாணவியர்களுக்குக்கழகச் சார்பில் பரிசுகள் வழங்கப் பெற்றன.

அன்று மாலை "குமுகாய நோக்கில் தமிழின முன்னேற்றம்" எனும் தலைப்பின் கீழ் புலவர் பேரா. திரு. பகவத்சிங். க.மு. (முருகபாரதி) தமிழ்ப் பேராசிரியர், திருவண்ணுமலை) அவர்களை நடுவராகக் கொண்டு பாட்டரங்கம் நடைபெற்றது. தாழை சலீம் கிப்ரான். தா. மனோகரன், சு. தட்சணுமூர்த்தி, எச். சுபக்கதீன், கி இரவி, செ. கிருபாகரன் ஆகியோர் 'தமிழின முன்னேற்றம்' குறித்து பாடினர்.

விழா நிறைவு நிகழ்ச்சியாக திரு சிதம்பரநாதன் தலைமையில் இளைஞர்களால் இன்னிசை நிகழ்ச்சி நிகழ்வுற்றுக் கூட்டத்தினரை மகிழ்வுறச் செய்தது. இறுதியில் விழா அமைப்பாளரும், அவலூர்ப்பேட்டை வட்டச் செயலருமான திரு. தா. நெஞ்சிற்கினியன் நன்றியுரைகூற விழா இனிது நிறைவுற்றது,

இந்தியாவில் திரைப்படக் கொட்டகைகள்

0	இந்தியா முழுவதும் உள்ள திரைப்படக் கொட்டகைகள் —	ஏறத்தாழ 10 ஆயிரம்
0	இதில் தமிழ் நாட்டில்மட்டும் உள்ள கொட்டகைகள் —	ஏறத்தாழ 1,200

அடிமைக்கு வாய்ச்சோறு நீ பெறும் விலையா?

அகம் கரியார்

— தமிழ்வேள் —

6. புரியாத மொழிபெயர்ப்பு!

ஆங்கிலத்தில் 14 வரிகளைக் கொண்ட ஒரு பாவகையை சேனட் (Sonnet) என்று சொல்வார்கள். அந்த ஆங்கிலப் பாவகையைத் தழுவித் தமிழில் சில பாக்களை எழுதி வெளியிட்டார் சூரியநாராயண சாத்திரியார். அந்தப் பாக்கள் தமிழ் இலக்கணத்துக்கு எந்த அளவும் உட்படாதவை. 'அப்பாக்களைக் காணும் தமிழ்ப்புலவர்கள் அவற்றைக் கண்டிட்பார்களே! இயற்பெயரிலேயே அவற்றை வெளியிட்டால் எதிர்ப்பு வருமே! அதிலும் தமிழ் ஆசிரியராக இருப்பவரே இப்படித் தமிழ் இலக்கணத்தை மீறலாமா?'' என்று கேட்பார்களே என்ற அச்சத்தினால் அவர் ஒரு புனைபெயரைத் தேடியிருக்கிறார். எலிமிச்சம்பழம் என்பதை ஆங்கிலத்தில் வேடிக்கையாக "Rat Reminder Fruit" என்று சொல்வது போல், சூரியன் என்பதைப் பரிதி என்றும் நாராயணன் என்பதை மால் என்றும் சாத்திரியார் என்பதைக் கலைஞர் என்றும் ஒன்று சேர்த்து ஒரு புனைபெயரை உருவாக்கி அப்புதுப்பாக்களை வெளியிட்டிருக்கிறார். அவர் அப்படி வேடிக்கையாக வைத்துக் கொண்ட பெயர்தான் 'பரிதிமாற்கலைஞர்' என்பதே தவிர, தனித்தமிழ் ஆர்வத்தால் வைத்துக் கொண்ட பெயர் அன்று.

தமிழால் பிழைக்கும் மற்றொருவர். முதலில் தமிழ் ஆசிரியராக இருந்து பின்னர் அதனைவிட்டு இதழ் ஆசிரியராக மாறிக், கதைநூல்களை எழுதிவருபவர். அவர் சில ஆண்டுகளுக்குமுன் பாரிசு நகருக்குச் சென்றிருக்கிறார். அவரை அங்கே தமிழ்த்தொண்டன் என்னும் தனித்தமிழ் அன்பர் வானூர்தி நிலையம் சென்று வரவேற்றிருக்கிறார்.

அந்தத் தமிழ் எழுத்தாளரை அழைத்து அங்கே உள்ள ஒரு மாணவர் இல்லத்தில் வரவேற்பு அளித்திருக்கிறார்கள் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் பாராட்டும் தனித்தமிழில் இருந்ததை அந்த எழுத்தாளரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அங்கே அந்த வரவேற்புக் கூட்டத்திலேயே அவர் அதனை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டாராம், "சுத்தத் தமிழிலேயே எழுதவேண்டும் பேசவேண்டும் என்ற எண்ணம் மாற்றப்பட வேண்டும். உலகில் கலப்பில்லாத மொழியே இல்லை. ஆங்கில மொழிச் சிறப்புக்கு ஒரு காரணம் தன்மொழியில் இல்லாத பிறமொழிச்சொற்களைத் தயங்காது சேர்த்துக் கொள்ளும் முறையே! பலநாட்டு உணவுகளை விரும்புகிறோம். 'பலநாட்டு ஆடைகளை அணிகிறோம்'. பலநாட்டு மொழிகளில் உள்ள வார்த்தைகள் நம்மொழியில் இல்லாத போது அவற்றை சேர்த்துக் கொள்ள மறுப்பானேன்.'' என்று கூறினாராம். தமிழ்நாளேடு ஒன்றில் வந்திருந்த செய்தி இது!

இத்தகையவர்களைத் தமிழ்ப் பகைவர்கள் - தமிழினப்பகைவர்கள் என்று சொல்வதில் என்ன தவறு? தமிழன்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் வெளிவரும் கிழமை மாத இதழ்களில் பெரும்பாலானவை எத்தகையவர்கள் கைகளில் உள்ளன என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்ட கிழமை இதழ் ஒன்றில் ஒரு பெண்மணியின் பெயரில் வெளிவந்திருந்த கட்டுரை இது!

"மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என் கண்ணில்பட்ட சில தமிழ் அறிவிப்புகளை இங்கே குறிப்பிடுகிறேன். பலவாசகர்களுக்கு இது புதுமையாகவும் வேடிக்கையாகவும் இருக்கும்(!) டாய்லெட்டைக் குறிப்பிடும் விதம் 'ஒப்பனை' டாக்சிக்கு வாடகைச்சீருந்து, எக்சிட்(வெளியே போகும் வழிக்கு) வெளிச்செல்வாயில், ஓவர்சீசு பிரயாணிகள் வரும் இடத்தின் பெயர் பன்னாட்டுவருகை. நோ டிப்சு என்ற எச்சரிக்கை வாசகம், 'சிறு கைக்கூலி கொடுக்காதீர்?'

"தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு ஏன், சென்னை வாசிகளுக்குக் கூடப் புரியாத இந்த மொழிபெயர்ப்பு வாசகங்களை விமான நிலையத்தில் பயன்படுத்த யார் உதவினார்களோ! ஒருவேளை மத்திய அரசில் பணிபுரியும் தமிழ்ப்புலவர்கள் யாரேனும் கொடுத்திருக்கலாம். நல்ல மொழிபெயர்ப்பு என்பது மக்களுக்குப் புரியக் கூடிய எளிய வாசகமாக இருக்க வேண்டும். இலட்சக்கணக்கான தமிழ் வாசகர்களுக்கு ஏற்ற முறையில்(!) எழுதி அளிக்கக் கூடிய பத்திரிக்கை ஆசிரியர்கள்(!) சிலரை இது போன்ற விசயங்களில் கலந்து கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்!"

"சிறுகைக்கூலி கொடுக்காதீர் என்றால் என்ன பொருள்? பெரிய கைக் கூலியாகத் தாராளமாக 'டிப்சு' கொடுத்து விட்டுச் செல்லுங்கள் என்று சொல்வதாக எடுத்துக் கொள்ளலாமே?"

தனித்தமிழை எவ்வளவு கிண்டல் செய்திருக்கிறார் என்பது புரிகிறதல்லவா?

'அடுத்துசில மாதங்களுக்குப்பின் வந்த இதழில் அந்தப் பெண்மணியே எழுதியிருந்தார்.'

"நான் தமிழ் மொழிக்கு ஒன்றும் விரோதி அல்ல. நீங்கள் என்னை 'டிப்சு' என்ற ஆங்கிலச் சொல்லை எனது தொடரில் உபயோகித்திருப்பதன் மூலம், அயல் மொழிச் சொற்களை அப்படியே கையாள வேண்டும் என்ற எண்ணம் உடையவள் என்று குறிப்பிட்டுள்ளீர்கள், நன்று. நான் இலக்கியம் எழுதவில்லையே! மேலும் அயல் மொழிச் சொற்களை எனது இனிய தாய்மொழியான தமிழ் மொழியுடன் சேர்த்து எழுதுவதால் தமிழ் மொழிக்கு எந்த விதத்திலும் இழுக்கு வராது என்று தான் கருதுகிறேன்.''

எவ்வளவு கரவாகத் தமிழைக் கெடுக்கப் பார்க்கிறார்கள் என்பது தெரிகிறதல்லவா? இத்தகையவர்களை எப்படித்தான் தமிழரோடு தமிழராக இணைந்துத் தமிழ்ச் சும தமிழராகக்கொள்வது,என்று அவர்களுக்காகப் பரிந்துபேச முன்வரும் தமிழர்கள் நினைத்துப்பார்க்க வேண்டும்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறில்லை யானால், தீவிரப்போராளிகளால் அவர்கள் அழுத்தப் படுவதாக யார் இவரிடம் கூறியவர்?

அப்படித் தமக்காக ஒரு கொள்கையில்லாத தமிழ்த்தலைவர் யார்?

அடையாளங் காட்டுவாரா செயவர்த்தனா? பின் எதற்குத் தமிழ்த்தலைவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறார்?

—இவர் கருத்திலிருந்து தமிழ்த்தலைவர்களுக்கும் இவருக்கும் உள்ள ஏதோ உள்முகத் தொடர்பு ஒன்று இருக்கிறது என்பது விளங்கவில்லையா?

தமிழீழ மக்கள் சிந்திக்க வேண்டும்!

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவ மாணவியர் அனைவரும் தவறாமல் மாநாட்டில் பங்கு கொள்ள வேண்டுகின்றோம்!

மாநாட்டில் கலந்து கொள்ளும் அறிஞர்கள், விரர்கள, வரலாறு படைக்கப் போகும் மறவர்கள் அனைவரின் பெயர்ப்பட்டியலும், நிகழ்ச்சி நிரலும் அடுத்து வெளிவரும்.

அதற்குள் ஆங்காங்குள்ள அன்பர்கள், ஆர்வலர்கள், செல்வர்கள், உரிமை கொண்ட அருமை ஆர்வ நெஞ்சங்கள் தங்களால் இயன்ற உதவியை 'மாநாட்டுக் கொடை' என்னும் பெயரில் 'தமிழ் நிலம்' வழியாக, அனுப்பித்தாருங்கள் என்று வேண்டிக் கொள்கிறோம்!

விண்வெளியிலிருந்து செய்தித்தாள்கள்!

இப்பொழுது, மாசுக்கோவில் வெளிவரும் நடுவண் சோவியத்து இதழிகைகளை, வோல்கா ஆற்றங் கரையில் உள்ள சரதோவ் நகரில் அச்சிட, மாசுக்கோ தொலைக்காட்சி "ஒரைசன்'' என்ற செய்தி-செயற் கைக்-கோளும் பயன்படுத்தப்படுகின்றது வடகாசசக யூரல்க முதலிய தொலைதூரப் பகுதிகளில் இதழிகைகள் விரைவில் கிடைக்கும்படி செய்வதற்கும், விரைவில் இந்த முறை கையாளப்படும்.

"இந்த முறை முற்றிலும் புதுமையானது'' என்று சோவியத்து அரசின் செய்திப் போக்குவரத்து அமைச்சகத்தைச் சேர்ந்த செர்கி மார்ச்செனித்சென் கூறினார். "தாளிகையில்' படம், விண்வெளி வழியே நிலைய அச்சுக் கூடத்திற்கு நேரடியாகச் செல்கிறது. இந்தப் புதிய முறை மிகவும் திறமை வாய்ந்ததாகும் இதை இடைமறிக்க வானொலி அலைகளைக் கொண்டு இதை இடைமறிக்க முடியாது. ஆகவே. இந்த முறையில் அச்சிடப்படும் இதழிகையின் தரம் மிகவும் உயர்வாக உள்ளது.

சோவியத்து ஒன்றியத்தில் நாள் செய்தித்தாள்கள் வெகுதூரத்தில் உள்ள நகரங்களிலிருந்து வெளியிடப்படுகின்றன 18 நடுவண் செய்தித்தாளிகைகளையும், 10 கிழமையாக' இதழிகைகளையும் அச்சிடுவதற்கு இந்தப் புதிய முறை பயன்படுத்தப்படுகிறது. நாள் இதழிகைகளை மக்களுக்கு விரைவாக பரப்புவதற்கு இந்தப் புதிய முறை பயன்படுகிறது'

வல்லமையை வீழ்த்துவோம்!

வல்லமை இன்னும்
எத்தனை நாட்கள்
வாழ்ந்திடும் என்று
நான் கேட்கிறேன?

நல்லவை இன்னும்
எத்தனை நாள்தான்
நலிந்தே இருக்கும்?
நான் கேட்கிறேன!

அன்பினை அழுதாய்
ஊட்டிய அன்னையின்
பணியினைப் பசியில
நான் நினைக்கிறேன்!

அடிமையின் வாழ்வை
அழித்திடும் செயலை
அயராமல் நானே
அழித்திடுகின்றேன்!

சொல்லாலே வாழ்ந்திடும்
செயலற்ற வீரனை
சொலவனைத் தாழ்த்தியே
அதை அழிக்கிறேன்!

— சிந்தனைச் சிற்பி. பறம்பை

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி தா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு. திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.